களுக்கும் நெல்லை அனுப்பும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சொல்லப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் குறுவை நெல்லை அவர்களுடைய அதிகாரிகளே தஞ்சை மாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட பகுதிக்குச் சென்று உடனுக்குடன் நெல்லை எடுத்துச் சென்று அவர்களுடைய மாவட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குரிய லாரிகளுக்கு அவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். விரைவாகக் கொள்முதல் நடைபெற்று வருகிறது.

(3) அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி--உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/75), 27—10--1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், 27--10---1975 ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு திருத்தம் ஏதுமின்றி ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/75).

2. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/75).

(4) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

விவாதம்—தொடர்ச்சி

* **திரு. இ. எஸ். தியாகராசன்** : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அவை முன் வைக்கப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து தமிழரசுக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு அறிவித்த 20 அம்சத் திட்டங்களைத் தமிழக அரசு பல ஆண்டு காலமாகவே செய்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக் கொண்டால் நிலமற்ற ஏழைகளுக்குத் தமிழக அரசு பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை வழங்கியிருக்கிறது என்பதை இங்கே நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஏழை விவசாயிகள் முதலாளிகளிடம் கடன்பட்டு அனுபவித்து வந்த துன்பங்களைப் போக்க வேண்டுமென்ற வகையில் வேறு எந்த மாநிலமும் சாதிக்க முடியாத நிலையிலே இங்கு ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு நிலவள வங்கியினை ஏற்படுத்தி அந்த வங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்குப் போதுமான கடன் உதவியை அளித்து அந்த விவசாயிகள் நல்ல நிலையில் வாழ நல்ல திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே பசுமைப் புரட்சியை ஏற்படுத்த நம்முடைய அரசு மும்முரமான பணிகளைச் செய்து வந்திருக்கிறது. இந்த நிலவள வங்கிகள் தமிழகத்திலே மட்டுந்தான் ஒன்றியத்திற்கு ஒன்று வீதம் இருக்கின்றன. அண்டையில் இருக்கும் ஆந்திர மாநிலத்தில் இன்றும்கூட தாலுகாவுக்கு ஒன்றுதான் இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.